CHRISTIAN BELIEVERS' FELLOWSHIP

FAITH HOPE LOVE

WE BELIEVE IN THE SPIRITUAL UNITY OF BELIEVERS IN OUR LORD JESUS CHRIST

# 11-வது வருட பாக்கிய தினங்கள்

**1984 ஜனவரி 13, 14, 15, 16 தேதிகள்**

உபதேசிக்கிறவர்கள்:

சகோ. ஸ்டான்லி பிரின்ஸ்

டாக்டர் ஜான் வில்மாட்

சகோ. சார்லஸ் சௌந்தரராஜன்

போதகர் சாம் சுந்தர்

சகோ. சாம் ஜெபத்துரை

---

## கிறிஸ்தவ விசுவாசிகளின் ஐக்கியம்

யெகோவா ஷாலோம், ஆழ்வார் தெரு,

**கோவில்பட்டி.**

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

# கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளைகள்

1. மனம் திரும்புங்கள்...... மத் 4:17
2. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் மத் 6:33
3. சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்...... மத் 1:15
4. நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் யோ 3:7
5. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் யோ 20:22
6. என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் மத் 11:29
7. நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள் லூ 22:40
8. தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள் மார் 11:22
9. வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் யோ 5:39
10. உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது மத் 5:16
11. விழித்திருங்கள்...... மார் 13:35
12. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில்...... அன்பு கூறுவாயாக மார் 12:30

## ஆரம்ப கீதம்

என் கன்மலையும் என் மீட்பருமானவரே
என் வாயின் வார்த்தைகளும்
என் இதயத்தின் தியானங்களும்
உம் சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக. —2

கர்த்தாவே உமது பாதையில் நடக்க
கருணை கூர்ந்திடுமே. —2
வேதத்தை தியானிக்க மதுரமானது
பேதையை ஞானியாக்கிடுமே. —2 —என்

## 1 பல்லவி

அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா —(2)

### அநுபல்லவி

ஆனந்தக் கூட்டமாய் ஒன்றாகக்கூடி
ஆண்டவர் இயேசுவை வாழ்த்திடுவோம்.
—அல்லேலூயா...

### சரணம்

1. விசுவாசக் கூட்டத்தார் ஒன்றாகச்சேர்வோம்
தர்க்கங்கள் யாவையும் தள்ளிடுவோமே
இயேசுவின் அன்பையே உயர்த்திடுவோமே
என்றென்றும் அன்பிலே ஒன்றாய் நின்றே
—ஆனந்த...

2. உறுப்புகள் பலவாகும் என்றிருந்தாலும்
உடல் ஒன்று ஒன்றேதான் ஆகுமன்றோ
போர் செய்ய ஒன்றாய் சேர்ந்திடுவோமே
எதிரி சாத்தானை வீழ்த்திடவே —ஆனந்த...

---

Man says we must have something. God says we must be something.

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்

---

3. ஜெயவீரர் இயேசு நம்முன் செல்கிறாரே
ஜெபசிந்தை கொண்டோராய் பின் செல்லுவோமே
வேதமாம் பட்டயம் ஏந்திடுவோமே
வேரோடு சாத்தானை வீழ்த்திடுவோம் —ஆனந்த...

4. உப்பாய் ஒளியாய் உலகுக்கு ஆவோம்
உறக்கம் விடுத்து நாம் எழுந்திடுவோமே
இயேசுவின் பாதம் எண்ணற்றோர் சேர
இணைக்கும் பணியில் முன்னே நிற்போம்
—ஆனந்த...

## 2

### பல்லவி

அன்பினில் பிறந்த இறைகுலம் நாமே
அன்பினைக் காத்து அறம் வளர்ப்போமே
அறம் வளர்ப்போமே.

### சரணம்

1. ஒரு மனத்தோராய் அனைவரும் வாழ்வோம்
அருளொளி வீசும் ஒரு வழி போவோம்
பிரிவினை மாய்த்து திருமறை காப்போம்—2
ஒருமையில் இறைவன் திருவுளம் காண்போம்
—அன்பினில்...

2. பிறப்பிலும் இயேசு இறப்பிலும் காட்டி
பெருமை செய்தாரே புனித பேரன்பை
பிறந்த நம் வாழ்வின் பயன் பெறவேண்டும்—2
பிறரையும் நம்மைப்போல் நினைத்திட வேண்டும்
—அன்பினில்...

---

God the Holy Spirit has given us the Bible; no gift which is truly from the Holy Spirit will contradict the Bible.

எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான்.

---

3. மலர்ந்திடும்போது மணம் தரும் பூப்போல்
புலர்ந்திடும் வாழ்வு பணிவிடை செய்தால்
நலம்பெறக் காக்கும் கடவுளைப் போற்றி—2
நிலந்தனில் இணைந்த குடும்பமாய் வாழ்வோம்
—அன்பினில்...

# 3

1. ஆதியந்தம் அனைத்துமான உலக ஜோதியே
ஆத்ம பாவம் போக்க வந்த ஜீவ ஜோதியே
ஆதி சக்தி நாயகனாய் அமைந்த ஜோதியே
பாத சரண் பற்றி நின்றிடும் பரம ஜோதியே

வந்தருள்வீரே காத்தருள்வீரே
தூய்மை பெறவே அருள் ஈந்திடுவீரே

2. பாரில் யாவும் படைத்து அளித்த ஆதி நாயகா
பாரில் மக்கள் வாழ்வை காக்கும் லோக நாயகா
பக்தர் போற்றிப் பாடிப்புகழும் கருணை நாயகா
பாதுகாத்து வழி நடத்தும் பரம நாயகா
—வந்தருள்வீரே...

3. பாவி வாழ்வை மாற்ற வந்த ஞான குருபரா
பாரில் மனிதப் பிறவி கொண்ட தெய்வ குருபரா
பாடுபட்டு தன்னை ஈந்த கருணைக் குருபரா
பாவம்போக்கி என்னை மீட்ட வேதக் குருபரா
—வந்தருள்வீரே...

4. நற்கனி தந்து காக்கும் தூய நாயகா
ஏற்றவரம் பகிர்ந்தளிக்கும் சக்தி நாயகா
அறவழியில் நடத்திச் செல்லும் அருள் நாயகா
பரலோக நெறி நடத்தும் முக்தி நாயகா
—வந்தருள்வீரே...

---

Authentic Christian living has its own order of priority in our lives; God first, others second, self third.

கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்து கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

---

## 4

1. சரணம் சரணம் சரணம் சரணம் சச்சிதானந்தா
சரணம் சரணம் சரணம் சரணம் நித்தியானந்தா
சத்திய வழியும் ஜீவனுமான சற்குரு ஆனந்தா
நித்திய வாழ்வினைத் தந்திட வந்த நிர்மல ஆனந்தா

அல்லேலூயா ஓசன்னா (4)
அல்லேலூயா அல்லேலூயா ஓசன்னா ஓசன்னா (3)

2. தருணம் தருணம் தருணம் தருணம் தற்பரனே தருணம்
தந்தையின் அன்பைத் தந்திட்ட எங்கள் சற்குருவே தருணம்
விந்தை மனிதரை ஒளிதனில் நடத்திட உதவிடுவாய் தருணம்
தருணம் இதுவே மீட்பினைப் பெற்றிட செய்திட்டோம் தருணம்
—அல்லேலூயா...

3. சரணம் சரணம் சரணம் சரணம் சச்சிதானந்தா
சரணம் சரணம் சரணம் சரணம் நித்தியானந்தா
முத்தி முதலாய் இருந்த எங்கள் முன்னவனே சரணம்
சித்தி பெற்றிட சித்தம் செய்திட பணிந்திட்டோம் சரணம்
—அல்லேலூயா...

## 5

தேவ ஜனமே பாடி துதிப்போம்
தேவ தேவனை போற்றுவோம்
துதிகள் என்றும் ஏற்றியே
அவரில் களித்திடுவோம்

1. சென்ற நாளில் கண்ணின் மணிப்போல்
காத்த தேவனை துதித்திடுவோம்
நீதி தயவு கிருபை நல்கும்
ஜீவ தேவனை துதித்திடுவோம் —தேவ...

---

I need Jesus Christ for my external life, and the Holy Spirit of God for my internal life.

## 5

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள். அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

---

2. வானம் பூமி ஆளும் தேவன்
வாக்கை என்றுமே காத்திடுவார்
அவரின் உண்மை என்றும் நிலைக்கும்
மகிமை தேவனை துதித்திடுவோம் —தேவ...

3. கர்த்தர் நாமம் ஓங்கி படர
தேவ மகிமை விளங்கிடவே
தேவ சுதராய் சேவை செய்து
தேவ ராஜனை வாழ்த்திடுவோம் —தேவ...

4. தம்மை நோக்கி வேண்டும் போது
தாங்கி என்றுமே ஆதரித்தார்
மறந்திடாமல் உறங்கிடாமல்
நினைத்த தேவனை துதித்திடுவோம் —தேவ...

5. நமது போரை தாமே முடித்து
ஜெயமே என்றும் அளித்திடுவார்
சேனை அதிபன் நமது தேவன்
அவரை என்றும் போற்றிடுவோம் —தேவ...

## 6

அவர் என்தன் சங்கீதமானவர்
அரணான கோட்டையுமாம்
ஜீவனின் அதிபதியான கர்த்தரை
ஜீவிய காலமெல்லாம் வாழ்த்துவோம்.

1. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூதர் கணங்கள் போற்றும் தேவனவரே
வேண்டிடும் பக்தர்களின் குறைகள் கேட்கும்
திக்கற்ற பிள்ளைகளின் தேவனவரே —அவர் ..

---

Just as the Lord Jesus is able to meet every need of the sinner, so the Holy Spirit is able to meet every need of the believer.

சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.

2. இரண்டு மூன்று பேர் எந்தன் நாமத்திலே
இருதயம் ஒருமித்து அவர் நடுவில்
இருப்பேன் என்றவர் நமது தேவன்
இருகரங்கூப்பி என்றும் வணங்கிடுவோம். —அவர்...

3. வானவர் கிறிஸ்தேசு நாமமதை
வாழ்நாள் முழுவதும் வாழ்த்திடுவோம்
வருகையில் அவரோடு இணைந்து என்றும்
வணங்குவோம் வாழ்த்துவோம் போற்றிடுவோம்
—அவர்...

## 7

1. ஜெகதலத்தின் இரட்சகா நமோ
மகத்துவத்தின் வித்தகா நமோ
இபரத்தின் சத்துவா நமோ
நமஸ்கரித்தோம் பாதம் சரணமே

மாரநாதா அல்லேலூயா (2)
நமஸ்கரித்தோம் பாதம் சரணமே } 3
நித்திய சத்திய சுத்த மகத்துவ
அத்தனாம் வித்தக தேவனாம் ரட்சகா
நாதா உந்தன் பாதம் சரணமே

2. சத்ய வேத சீலனே நமோ
நித்ய ஜீவ தேவனே நமோ
தத்வ ஞான கோலனே நமோ
நமஸ்கரித்தோம் பாதம் சரணமே —மாரநாதா...

3. பாவி என்னை மீட்டவா நமோ
ஆவி தன்னை அளிப்பவா நமோ
மேவி என்னை அழைப்பவா நமோ
நமஸ்கரித்தோம் பாதம் சரணமே —மாரநாதா...

The talkative Christian is usually a powerless Christian.

உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்து கொண்டு சேர்த்துக்கொள்கிறவன் பாக்கியவான்.

8

இதயங்கள் மலரட்டுமே — இங்கு } 2 —நம்மில்
இன்னிசை முழங்கட்டுமே
இறையருள் வளரட்டுமே — அது
இகமெல்லாம் பரவட்டுமே. —இத...

1. அண்ணலே, இங்கு நம்மை அழைத்தார் — இம்
மண்ணிலே, பொங்கும் வாழ்வளித்தார்
வரையில்லா வரங்களை நமக்களித்தார் — 2-தம்
கரையில்லாக் கருணையால் நம்மை மீட்டார் —இத...

2. அன்பினிலே மலர்கின்ற விசுவாசம் — அது
குன்றின் மேல் ஒளிர்கின்ற திருவிளக்காம்
நீதியும் உண்மையும் அதன் சுடராம்—2 —அவை
தீதில்லா வாழ்வுக்குச் சான்றுகளாம். —இத...

9

அல்லேலூயா அல்லேலூயா
ஆத்துமாவே கர்த்தரைத் துதி
உயிர் உள்ளளவும் அவரைத் துதித்து
உள்ளளவும் பாடிடுவேன்

1. பிரபுக்கள் மனுஷரை நம்பாதேயுங்கள்
அவர்கள் யோசனைகள் அழிந்துபோகும்
யாக்கோபின் தேவன் துணை கொண்டு
கர்த்தரை நம்புவோர் பாக்கியவான். —அல்லேலூயா...

2. யாவையும் படைத்து உண்மையைக் காக்கிறார்
ஒடுக்கப்பட்டோர்க்கு நியாயம் செய்கிறார்
பசித்தோர்க்கு ஆகாரம் தந்து
கட்டுண்டோரைக் கட்டவிழ்க்கிறார். —அல்லேலூயா...

Pentecost is just as much a reality as Calvary.

[illegible]

---

3. குருடர் கண்களைக் கர்த்தர் திறந்து
விழுந்தோரைத் தூக்கி விடுகிறார்
நீதிமான்களைக் கர்த்தர் நேசித்து
பரதேசிகளையோ நித்தம் காக்கிறார். —அல்லேலூயா _

4. திக்கற்ற பிள்ளை விதவையையும் போஷித்து
துன்மார்க்கர் வழியைக் கவிழ்க்கிறார்
சீயோனைக் கர்த்தர் என்றென்றுமாய்
தலைமுறையாய் அரசாளுவார். —அல்லேலூயா _

## 10

இயேசுவின் நாமம் அன்பின் நாமம்
இன்பம் சாந்திடும் மதுர நாமம்

1. கூனர் நிமிர்ந்திட செவிடர் கேட்டிட
பாவம் போக்கிடும் பரலோக நாமம் —இயேசுவின் _

2. சாத்தான் வீழ்ந்திட சத்தியம் ஓங்கிட
சபையில் நிறைந்திடும் புண்ணிய நாமம் —இயேசுவின் _

3. வஞ்சகம் நீக்கிட தஞ்சம் பெற்றிட
வாஞ்சையில் நிறைந்திடும் புனித நாமம் —இயேசுவின் _

4. வறுமை நீக்கிட அருமை பெற்றிட
வளத்தில் நிறைந்திடும் வல்ல நாமம் —இயேசுவின் _

5. அநீதி நீக்கிட நீதி பெற்றிட
குருதி சிந்திடும் குறைவில்லா நாமம் —இயேசுவின் _

6. உண்மை வளர்த்திட ஊக்கம் உயர்த்திட
உரிமை நிறைந்திடும் உன்னத நாமம் —இயேசுவின் _

7. அறுவடை பெருகிட ஆட்களை அழைத்திட
ஆவியைப் பொழிந்திடும் ஆனந்த நாமம் -இயேசுவின் _

---

Worry is a great sin. If you worry, you don't trust God and if you trust Him you need not worry.

## 11

கர்த்தரின் வேதம் குறைவற்றதே
ஆத்துமாவை உயிர்ப்பிக்குமே
பொன்னிலும் பசும் பொன்னிலும்
மேலானதே மிக மேலானதே
தேனிலும் தெளி தேனிலும்
சுவையானதே மிக சுவையானதே
—கர்த்தரின் வேதம்...

1. கர்த்தரின் நியாயம் செம்மையே
இருதயத்தைக் களிப்பாக்குமே —பொன்னிலும்...

2. கர்த்தரின் சாட்சி சத்தியமே
பேதைகளை ஞானியாக்குமே —பொன்னிலும்...

3. கர்த்தரின் கற்பனை தூய்மையே
கண்களைத் தெளிவாக ஆக்கிடுமே —பொன்னிலும்...

## 12

வேதம் அரிய வேதம்
எந்தன் தேவன் தந்தது
உன்னை மாற்றும் புதிதாக்கும்
உயர் நோக்கம் கொண்டது

1. தினமும் நடக்கும் வழியை
திரு விருந்தாய் தந்திடும்
தியங்கும் மனதை திருப்பி
துயர் பலவும் போக்கிடும்
தீமை செய்ய ஓடும் காலைத்
தடுத்து நிறுத்திடும்
தூய்மை யாக்கிடும் (2) —வேதம்...

It is the ministry of the Holy Spirit who, as we yield to His influence, removes all that is unlike Christ and imparts to us His own perfections.

சிட்சித்து, உம்முடைய வேதத்தைக் கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்.

---

2. பரமன் இரத்தம் பாய்ந்தோடிய
கல்வாரி காட்டிடும்
பாரம் சுமந்த இயேசு
தேவன் தியாகமாய் தந்தது
பாதை தவறி ஓடும் உன்னை
பாசமாய் அழைத்திடும்
பாதை காட்டிடும் (2) —வேதம்...

## 13

கர்த்தரை என்றும் நம்பிக்கையாக
கொண்டவன் எவனோ பாக்கியவான்
வருத்தமின்றி வறட்சி காலத்தில்
தப்பாமல் கனி தருவான்

1. தேவன் தங்கிடும் உயர்ந்த ஸ்தானம்
என்றும் விரும்பியே சேர்வாய்
நிலைத்திருந்தே கனி தந்திட
உணர்வின் ஜீவியம் அவசியமே —கர்த்தரை...

2. ஆவியின் ஆற்றல் ஆழமாய் சென்றிடும்
வேர்களை உடையவன் செழிப்பான்
வெப்பகாலமும் தாழ்ச்சி இல்லாமல்
பசுமை நிறைவுடன் ஓங்கிடுவான் —கர்த்தரை...

3. மாம்ச பெலத்தை நம்பிடாமல் நீ
கர்த்தரை என்றுமே சார்வாய்
ஜீவ ஊற்றினை விலகாமலே
தேவன் விரும்பிடும் கனி தருவாய் —கர்த்தரை...

---

Before I can receive one hundred per cent from Christ, I must be one hundred percent for Christ.

அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

---

4. நற்குல கனியாய் மாறிட உன்னை
நாட்டியே இயேசுவை காண்பாய்
உந்தன் இச்சையை நிறைவேற்றாமல்
உணர்ந்து ஜீவியம் செய்திடுவாய் —கர்த்தரை...

5. வாசனை வீசிடும் கனியாய் மாறி
படர்ந்து ஓங்கியே செழிப்பாய்
தேவ கிருபை உன்னில் பெருக
மிகுந்த கனிகளை ஈந்திடுவாய் —கர்த்தரை...

## 14

கர்த்தர் எந்தன் மேய்ப்பர்
எனக்கென்றும் குறைவில்லை
பத்திரமாய் எனைகாப்பார்
அவரின்றி ஒருவரில்லை

1. பசுமை நிறைந்த புல்லில் நிதம் என்னை போஷித்து
அமர்ந்த நீரூற்றண்டை அவர் என்னை சேர்ப்பித்து
சேதமின்றி ஆத்துமத்தை
நித்தியமான நீதியின் பாதையில் என்றும் நடத்திடுவார்

2. சாவின் கோர சேதம் நான் கண்டு அஞ்சேனே
தேவன் வல்ல பாதம் என்றென்றும் தஞ்சமே
ஜீவபரன் என்னோடிருப்பார்
அவர்தம் கோலும் அவர்தம் தடியும் என்னைத்தேற்றும்

3. பகைவர் முன்னே என்னை அவர் மேன்மைபடுத்தி
நிகரில்லாத தைலம் பூசி என்னை உயர்த்தி
சாகும்வரை நன்மை தொடர
ஏசுதேவன் வீட்டில் நெடுநாள் நிலைத்திருப்பேன்.

---

Any work that calls the Holy Spirit and Gifts above Jesus, will finally end up in fanaticism.

கர்த்தருக்குப் பயந்து. அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ. அவன் பாக்கியவான்.

---

## 15

உந்தன் விஸ்வாச தோணியில் கர்த்தர் உண்டா
அவர் அமர்த்திட்ட கடலில் உன் யாத்திரை உண்டா
உணர்ந்திடுவாய் மனமே உணர்ந்திடுவாய்
இனி அனுகூலம் காண்பாய் உன் தேவன் அருளால்

1. கஷ்ட பிரயாசங்களோ கடன் தொல்லையோ
நீ காண்பாயோ இயேசு உன் அருகில் உள்ளாரே
வியாதி படுக்கையிலே சுகம் அளிப்பார்
உந்தன் வாழ்க்கை படகினிலே கர்த்தர் இருந்தால்
—உந்தன்...

2. மீண்டும் வருவேன் என்று உரைத்திட்டவர்
உன்னை மீட்டு கரம் பிடித்தார் உணர்ந்திடுவாய்
ஒடுங்கி சுமந்திடுவாய் திருவசனம் உன்னை
ஒழுங்காய் நடத்திடுவார் அவர் தயவால் —உந்தன்...

## 16

1. என் இதயக் கதவினில் ஓர் சத்தம்
நான் கேட்டேன், திறந்திட்டேன் } 2
உள்ளே வந்தார், என் உள்ளே வந்தார்
கள்ளனாம் எந்தன் உள்ளே வந்தார் } 2
விருந்தை அளித்திட்டார்
அருந்தி மகிழ்ந்திட்டேன் } 2

2. உன் இதயக் கதவினில் தட்டிடும் ஓர்
அன்பருண்டு. அறியாயோ நீ?
உன்னதர் இயேசு உள்ளே வந்தால்
உந்தனின் உள்ளம் இன்புறுமே.
இன்றைக்கே திறந்திடுவாய்
என்றென்றும் மனம் மகிழ்வாய்.
—என் இதயக் கதவினில்...

---

In our day some love their denominations and even their independent assemblies more than they love their Lord.

பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள், என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

---

## 17

என் சகோதரா எங்கு செல்கின்றாய்
இன்று நீ ஓர் நற்செய்தியை கேட்டுச் செல்வாயோ.

1. கஷ்டமான வாழ்க்கை உனதோ
கவலைகளும் தோல்விகளும் உண்டா
காத்திருக்கிறார் (உன்) இயேசு ராஜனே
கல்வாரியின் அன்பினாலே ஜெயம் தருவார்.

2. பஞ்சங்களும், பிரச்சனைகளும்
பூமியின் மேல் கண்ணியாய் வருமே
அன்பு தணியும் (மனிதர்) ஆறுதல் போகும்
அளித்திடுவார் உந்தனுக்கோ நித்ய சந்தோஷம்.

3. தீய மாந்தர் எதிர்த்திடுவார்.
தீமை சக்திகளும் அலைக்கழிக்கும்.
தடு மாறாதே (உண்மை) தேவனைத் தேடு
தூய வாழ்வைத் தந்திடுவார். இயேசுவை நாடு.

4. பாவ சேற்றின் தாழ்விடங்களில்
தூரமாய் கிடக்கும் உன்னை மீட்க
அழைக்கின்றாரே (உந்தன்) அன்பின் தேவனே
இரட்சிப்பின் சந்தோஷத்தை நீ பெற்று செல்வாயே

## 18

வாலிபரே, கன்னியரே நீங்கள் முன்வாருங்கள் - 2
இயேசுவே ராஜாவாய் வரும் நாள் - நீங்களும் } 2
அவரோடு சேர்ந்திட முன் வாருங்கள்

---

Christ, who once lived WITH us in flesh, now lives IN us by the Spirit.

கர்த்தர் நீதி செய்கிற தேவன். அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.

---

1. பாவத்தில் உழன்றிடும் உன் வாழ்க்கையைப்
பரிசுத்தமாக்குவார் முன் வருவாய்,
வீணாகவே நீ வாழ்ந்திட்டாலும்
விரும்பியே அழைக்கிறார் முன் வருவாய் } 2

2. தந்தையும் தாயுமே தள்ளிடினும்
தள்ளாமல் சேர்ப்பாரே முன் வருவாய்.
தன் கையில் ஆணிகள் ஏற்றவரே
தம் மார்பில் அணைப்பாரே முன் வருவாய்.

3. இவ்வுலகின் பாவம் விட்டு விட்டு
இயேசுவை மட்டுமே நீ பற்றிடுவாய்.
இயேசுவை யன்றி இப்பூவுலகில்
யாருண்டு நண்பா, நீ வந்திடுவாய்.

## 19

வாலிபனே உன் வாலிப வயதில்
சிருஷ்டி கர்த்தரை நினை,
வாலிபம் போய்விடும் வயோதிபமாகிடும்
காலமோ குறுகியது! —வாலிபனே...

1. பாசி படிந்த நிலத்தில் நடப்பது
வாலிபப் பருவத்திலே
நாம் எங்கே, எப்போது, எப்படி விழுவோம்
என்பது தெரியாது — இங்கு
யாருக்கும் புரியாது! —வாலிபனே...

2. நாகரிகம் என்னும் பாழும் உலகில்
நயந்து வாழ்பவனே
உன்னை உலகிற்கு ஒளியாக ஜீவிக்க இன்று
இயேசு அழைக்கிறாரே — உன்னை
அன்புடன் அழைக்கிறாரே! —வாலிபனே...

---

You are not a sinner because you sin; you sin because you are a sinner.

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

---

3. காணாமற் போன ஆடாய் இன்று
உலகினில் வாழ்பவனே
உன்னை கிறிஸ்து இயேசு மந்தையிற் சேர்க்க
அன்புடன் அழைக்கிறாரே — நீ
இன்றே வந்திடுவாய்! —வாலிபனே...

## 20

தகுதி இல்லை எனக்கு தேவரீர் எழுந்தருள —ஒரு
வார்த்தை சொன்னால் போதும்
வாழ்வு நான் பெறுவேன்.

1. யாயிரின் மகள் பிழைக்க
இயேசுவே கருணை செய்தீர் } 2
உன் மகள் பிழைத்தெழுவாள் — 2
என்றே உரைத்தது போல். —தகுதி...

2. தாவீதின் மகனே நீர்
என்மேல் இரங்கும் என்றான் } 2
கூவிய விழியிழந்தோன் — 2
விழிகள் அடைந்ததுபோல் —தகுதி...

3. நானுனக் குரைக்கின்றேன்
எழுந்து உன் இல்லம் செல்வாய் } 2
என்று நீர் முடவனுக்கு — 2
உரைத்திட்ட உரையினைப்போல். —தகுதி...

## 21

**பல்லவி**

ஒ! மனிதனே - நீ
எங்கே போகின்றாய்?
காலையில் மலர்ந்து மாலையில் மறையும்
மலராய் வாழ்கின்றாய்! (2)

---

The fruit is the evidence of the genuineness of our profession as Christians, whereas the gifts are not necessarily signs of this, since they can all be imitated by Satan.

மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்,

---

### சரணங்கள்

1. மண்ணில் பிறந்த மானிடனே
மண்ணுக்கே திரும்புவாய் } (2)
மரணம் உன்னை நெருங்கும்போது
எங்கே ஓடுவாய்?
மரணத்தின் பின்னால் நடப்பது என்ன?
என்பதை அறிவாயா? —ஓ! மனிதனே...

2. பாவியாய்ப் பிறந்த மானிடனே
பாவியாய் மரிக்கின்றாய்! } (2)
இயேசுவை உள்ளத்தில் பெற்றால் இன்றே
மரணத்தை வென்றிடுவாய்!
நித்திய ஜீவனைப் பெற்று மோட்சத்தில்
என்றும் வாழ்ந்திடுவாய்! —ஓ! மனிதனே...

## 22

யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வு தரும் வார்த்தையெல்லாம்
உம்மிடமன்றோ உள்ளன!
யாரிடம் செல்வோம் இறைவா

இறைவா... இறைவா... இறைவா... இறைவா...

1. அலை மோதும் உலகினிலே
ஆறுதல் நீ தரவேண்டும் } 2
அண்டி வந்தோம் அடைக்கலம் நீ
ஆதரித்தே அரவணைப்பாய்!—2 —இறைவா...

---

2. மனதினிலே போராட்டம்
மனிதனையே வாட்டுதையா
குணமதிலே மாறாட்டம்
குவலயந்தான் இணைவதெப்போ —யாரிடம்...

3. வேரறுந்த மரங்களிலே
விளைத்திருக்கும் மலர்களைப் போல்
உலகிருக்கும் நிலை கண்டும்
உனது மனம் இரங்காதோ —யாரிடம்...

## 23

என் இயேசுவே நான் என்றும்
உந்தன் சொந்தம்
என் ராஜனே அநுதினமும்
வழி நடத்தும்

1. உளையான சேற்றினின்றே
தூக்கியே நிறுத்தினீரே
உந்தனை நான் மறவேன்
உந்தனை போற்றிடுவேன் —என்...

2. அலைந்தோடும் கடலதனை
அடக்கியே அமர்த்தினீரே
வார்த்தையின் வல்லமையை
என்றுமே காணச் செய்யும் —என்...

3. தாயினும் அன்புவைத்தே
தாங்கியே காப்பவரே
ஜீவிய காலமெல்லாம்
உந்தனை பின் செல்லுவேன் —என்...

எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்,

4. அக்கினி சூளையிலே
நின்ற எம் மெய் தேவனே
விசுவாசம் திடமனதும்
என்றென்றும் தந்தருளும் —என்...

5. ஆகாரின் அழுகுரலை
அன்று நீர் கேட்டீரல்லோ
கருத்துடன் ஜெபித்துமே நான்
உந்தனைத் தேடுகிறேன் —என்—

## 24

இனியும் உம்மோடு கிட்டிச் சேர
ஆவியின் மாரியை ஊற்றும்—
ஆதி அன்பின் ஆழங்களில் என்னை
ஆழ்த்தி கிருபைகள் ஈந்திடும்! }2 —இனியும்...

1. பெலவீனன் என் அருகில்
பெலன் தாரும் வந்தெனக்காய் }2
உம்மைப் போல் நான் கனி தரவே
உமதாவியால் நிறைத்திடுமே! }2 —இனியும்...

2. நல்ல திராட்சை செடி நீரல்லோ
நானும் இணைந்து வாழ்ந்திடவே }2
எல்லா நாளும் கனி தந்திட
இயேசுவே சுத்தமாக்கிடுமே! }2 —இனியும்...

## 25

1. பரிசுத்தமான பரமனே என்னைப்
பாத்திரன் ஆக்கிடுமே }2
பரம தரிசனம் தாருமே தேவா
பரிசுத்தமாக்கிடுமே }2

It is not enough to say that the BIBLE contains the Word of God. It is the Word of God

சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்.

---

கர்த்தருக்குப் பரிசுத்தம்
கருத்துடன் நெற்றியிலே
பதித்திட உதவி செய்யும் } 2
பரமனே சுத்தமாக்கும்

2. அந்தரங்க வாழ்க்கையில் பரிசுத்தம் காண
அடிமைக்கு உதவி செய்யும்;
இரகசிய பாவங்கள் வெறுத்திட எனக்கு
இரங்கிடும் இந்நேரமே.

3. பொது வாழ்வில் என்னைப் பரிசுத்தமாகக்
காத்திட உதவி செய்யும்;
நாள்தோறும் என் வாழ்வில் உம்மையே உயர்த்த
பரிசுத்தம் தந்திடுமே.

4. தூசியை உதறி விட்டெழுந்திட எனக்குத்
தூயனே துணை செய்குவீர்;
வல்லமை தரித்து நான் வாழ்ந்திட இன்று
உம் ஆவி தந்திடுமே.

## 26

### பல்லவி

ஒரே வழி எந்தன் இயேசுவின் வழி
இன்ப மோட்ச நாட்டை நாம் சேரும் வழி
பாவமில்லா நாடு பரலோக நாடு
அந் நாடு சேர இயேசுவே வழி

### சரணம்

1. பூமியில் பிறந்ததின் நோக்கத்தை நினைத்து
கலங்கி சோர்வாயோ
நோக்கிப் பார் இயேசுவை
நோக்கமும் அர்த்தமும் தந்திடுவார் —ஒரேவழி...

---

The Bible is a perfect revelation of God's Will and the Hols Spirit is its only Interpreter." Every man by the study of ity teachings, is to learn his duty for himself.

கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.

---

2. பாவத்தின் பிடியினில் ஆத்துமா தியங்கி
பாரம் சுமப்பாயோ
நோக்கிப்பார் இயேசுவை
பாவமும் பாரமும் நீக்கிடுவார் —ஒரேவழி...

3. திரும்பி நீ பார்த்துமே பாவத்தில் விழுந்து
நிம்மதி இழந்தாயோ
நோக்கிப்பார் இயேசுவை
இரட்சிப்பின் சந்தோஷம் தந்திடுவார் —ஒரேவழி...

4. பாவத்தின் சம்பளம் மரணத்தை அழிக்க
இயேசு தோன்றினார்
மரித்தாரே உயிர்த்தாரே
பாதையாய் தீபமாய் மாறினாரே —ஒரேவழி...

## 27

வனாந்திரம் வயல்வெளியாகும் நேரமே
வெட்டாந்தரை நீர்த்தடாகமாக மாறுமே
வயல்வெளி காடாக எண்ணப்படுமே
பின்மாரியில் ஆறுகளும் பாய்ந்தோடுமே

1. வறண்ட நிலமும் மகிழ்ந்து பாடுமே
காடுவெளி களித்து செழிக்குமே
லீபனோனின் மகிமை வளருமே
கர்மேல் சாரோன் அழகு பெருமே —வனாந்திரம்...

2. தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி
தள்ளாடும் கால்களைப் பெலப்படுத்தி
திடன் கொள்ளுங்கள் என்று சொல்லுவோம்
பதில் அளிக்க தேவன் வருவார் —வனாந்திரம்...

---

The need in the church today is for more of commitment meetings than committee meetings; prayer than programmes; fasts than feasts.

3. குருடர்களின் கண்கள் காணுமே
செவிடர்களின் செவிகள் கேட்குமே
முடவன் மானைப் போல துள்ளுவான்
ஊமையன் நாவும் பாடுமே —வனாந்திரம்...

4. மீட்கப்பட்டவர் பாடல் கேட்குமே
நித்திய மகிழ்ச்சி தலைமேல் தங்குமே
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போகுமே
ஆசீர்வாத மழை பெய்யுமே —வனாந்திரம்...

## 28

கல்வாரி மாமலை ஓரம்
கோர காட்சி கண்டேனே
கண்ணில் நீர் ததும்பிடவே
கர்த்தர் இயேசு செல்கின்றாரே

1. எருசலேமின் வீதிகளில்
இரத்த வெள்ளம் பாய்ந்திடுதே
இருள் கோர நிந்தனையாய்
உருகுலைந்து செல்கின்றாரே —கல்வாரி...

2. சிலுவைத் தன் தோளதிலே
சிந்தும் தன் வேர்வையாலே
சிறுமை அடைந்தவராய்
பரிசுத்தர் போகின்றாரே —கல்வாரி...

3. மண்ணில் மானிடர் துயரம்
தனைத் தாங்கும் தந்தை இவர்
கண்ணில் நீர்த் ததும்பிடவே
விண்ணின் தேவனை அழைத்தார் —கல்வாரி...

4. மரணத்தை வென்றிடவே
மனுக் கோலம் கொண்ட இவர்
அருள் வாழ்வு தந்திடவே
அடைந்தார் இந்நிந்தனையை —கல்வாரி...

## 29

கர்த்தரின் நாள் நெருங்கிடுதே
தேவனின் வாக்கு நிறைவேறும்
தேவன் விரும்பும் ஜீவியம் காத்து
தேவனை சந்திக்க ஆயத்தமா

1. கர்த்தர் வரும் நாளை நோக்கிடும் நாமே
கர்த்தரில் நெருங்கியே சேர்வோம்
சுத்தர்கள் கூடும் ஐக்கியத்திலே
என்றுமே நிலைத்தே வாழ்ந்திடுவோம் —கர்த்தரின்...

2. அன்பு விசுவாசம் நம்பிக்கையுடனே
தெளிந்த நல் ஜீவியம் செய்வோம்
விழிப்புடன் நாமே காத்திருந்து
களிப்புடன் ஏகியே பறந்திடுவோம் —கர்த்தரின்...

3. கர்த்தர் வெளியாகும் நாளதைக் காண
ஆவலாய் ஆயத்தமாவோம்
குற்றமே இல்லா பக்தர்களாய்
இயேசுவின் சந்நிதி சேர்ந்திடுவோம் —கர்த்தரின்...

The time of old Testament was an age of God the Father. During the time that Jesus was on earth, it was an age of God the Son. Now we are living, since Pentecost, in the age of God the Holy Spirit.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன். இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்கிறவன் பாக்கியவான், என்றார்.

4. சமயம் வாய்க்காத வேளையிலும்
வசனத்தை சாற்றியே மகிழ்வோம்
புகழ்ச்சியும் மகிமை கனமடைய
விசுவாசம் காத்துமே ஏகிடுவோம் —கர்த்தரின்...

5. சுத்த மனசாட்சி காத்திடும் பக்தர்
ஏகியே பறந்தே போவார்
கர்த்தரைக் காண பரவசமே
கர்த்தரின் சாயலை அணிந்திடுவோம் —கர்த்தரின்...

## 30

1. இராஜாதி இராஜாவுக்கு துதிகனம் மகிமை
மன்னாதி மன்னனுக்கு துதி கனம் மகிமை } 2

2. தேவாதி தேவன் இதோ மேகமீதில் வந்திடுவார்
பரிசுத்தர் யாவருமே பரமனோடு சென்றிடுவோம் } 2

3. அல்லேலூயா ஆமென் அல்லேலூயா ஆமென்
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா ஆமென் } 2

## முடிவு கீதம்

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி
என் முழு உள்ளமே அவர் பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி—2

அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே—4
—என் ஆத்துமாவே...

May the love of a dying Saviour, the Power of a risen Saviour, the intercession of an ascended Saviour, and the glory of a returning Saviour, be the comfort and hope of all our hearts.

| பாடல் எண். | பாடல்கள் | பக்கம் எண். |
| --- | --- | --- |
| | ஆரம்ப கீதம்-என் கன்மலையும் என் மீட்பருமானவரே | 1 |
| 9. | அல்லேலூயா அல்லேலூயா ஆத்துமாவே | 7 |
| 1. | அல்லேலூயா ஜெயம் அல்லேலூயா | 1 |
| 6. | அவர் எந்தன் சங்கீதமானவர் | 5 |
| 2. | அன்பினில் பிறந்த இறைகுலம் நாமே | 2 |
| 3. | ஆதியந்தம் அனைத்துமான உலகஜோதியே | 3 |
| 8. | இதயங்கள் மலரட்டுமே | 7 |
| 10. | இயேசுவின் நாமம் அன்பின் நாமம் | 8 |
| 30. | இராஜாதி இராஜாவுக்கு துதிகனம் மகிமை | 23 |
| 24. | இனியும் உம்மோடு கிட்டிச்சேர | 18 |
| 15. | உந்தன் விசுவாச தோணியில் | 12 |
| 16. | என் இதய கதவினில் ஓர் சத்தம் | 12 |
| 23. | என் இயேசுவே நான் என்றும் | 17 |
| 17. | என் சகோதரா எங்கு செல்கின்றாய் | 13 |
| 26. | ஒரே வழி எந்தன் இயேசுவின் வழி | 19 |
| 21. | ஓ மனிதனே நீ எங்கே | 15 |
| 14. | கர்த்தர் எந்தன் மேய்ப்பர் | 11 |
| 13. | கர்த்தரை என்றும் நம்பிக்கையாக | 10 |
| 11. | கர்த்தரின் வேதம் குறைவற்றதே | 9 |
| 29. | கர்த்தரின் நாள் நெருங்கிடுதே | 22 |
| 28. | கல்வாரி மாமலை ஓரம் | 21 |
| 4. | சரணம் சரணம் சரணம் சரணம் | 4 |
| 20. | தகுதியில்லை எனக்கு | 15 |
| 5. | தேவ ஜனமே பாடித் துதிப்போம் | 4 |
| 25. | பரிசுத்தமான பரமனே | 18 |
| 22. | யாரிடம் செல்வோம் இறைவா | 16 |
| 27. | வனாந்திரம் வயல்வெளியாகும் | 20 |
| 18. | வாலிபரே கன்னியரே | 13 |
| 19. | வாலிபனே உன் வாலிப வயதில். | 14 |
| 12. | வேதம் அரிய வேதம் | 9 |
| 7. | ஜெகதலத்தின் ரட்சகா நமோ | 6 |
| | முடிவு கீதம் - என் ஆத்துமாவே கர்த்தரை | 23 |

அகில லோக சமாதானத்திற்காகவும், கடவுளுடைய பரிசுத்த சபைகளின் நல்வாழ்வுக்காகவும், அவைகளின் ஒருமைப்பாட்டுக்காகவும், கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

ஸ்ரீ தனலெக்ஷிமி பிரஸ், கோவில்பட்டி.